

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி. சுகவனம், மாநில தீர்மான குழு உறுப்பினர் எம்.வி வெற்றி செல்வம், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், துணை செயலாளர் டேம். டி. வெங்கடேசன், அணி துணை செயலாளர்கள் சீனிவாசன், பிரகாஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் நகர கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு தாராபுரம் நகர கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் சு.முருகானந்தம் தலைமையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மோகனூர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வனத்துறை அமைச்சர் டாக்டர்.மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள் பெ.இராமலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து ஏழை எளிய மக்களுக்கு பொங்கல் வழங்கி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள், ஒன்றிய, நகர கழகச் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 115வது பிறந்த தினத்தையொட்டி நகர பஸ் நிலையம் அருகேயுள்ள பேரறிஞர் அண்ணா வின் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர். இரா. இராஜேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள். ஜி. கே. சுபாசு. மு. கார்த்திகேயன் ஜி.குமரேவேல். மஞ்சுளா. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள். சி. ராஜேந்திரன். கே.டி. மணி, தாமரைக்கண்ணன். மேயர். ஆ ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.பூபதி பி. அசோகன். இரா.சந்திரன், மாநகர கழக நிர்வாகிகள். பா. ரகுபதி கே.ஆர். முருகன் . வி கணேசன், தினகரன் கோமதி, எம்.எம். செரீப் பகுதி கழக செயலாளர்கள் சாந்த மூர்த்தி, ஏ. எஸ். சரவணன். கே. ஜெய். கேபிள் ராஜா, தமிழரசன். ஜெயக்குமார், மனமேடு மோகன், ஜெகதீஸ், ஆர்.பி. முருகன். சி.பிரகாஷ். கே.டி.ஆர். தனசேகரன் உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



பேரறிஞர் அண்ணாவின் 115 வது பிறந்தநாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் ரவுண்டானா பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருஉருவச் சிலைக்கு மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.உடன் அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில தீர்மானக்குழு செயலாளர் கீரை.எம். விஸ்வநாதன்,மாவட்ட துணை செயலாளர் கிருஷ்ணகுமார்,ஒன்றிய செயலாளர்கள் வேடம்மாள்,சௌந்தரராசு,செங்கண்ணன், பேரூர் கழக செயலாளர் முல்லை ரவி மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## டெல்லி அதிகாரக்கோட்டை நெற்றிக்கண்ணைக் காட்டினாலும்,

# குற்றம் குற்றமே என்றுரைத்த திராவிட இயக்க நக்கீரன்தான் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



திராவிட இயக்கச் சிந்தனைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் வேர்களாகவும், விழுதுகளாகவும் இருப்பவை, தொன்மையான தமிழ் மரபுகளும், சிந்தனைகளும், இலக்கியங்களும், வாழ்வியல் முறைகளுமாகும். எனவே, இன்றைய திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கான அடித்தளம், தமிழனது கலை, கலாச்சாரம், நாகரிகம், பண்பாடு ஆகிய வாழ்வியல் கூறுகள்தான் அடித்தளமாகின்றன.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம், நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்து குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை எனப் பெயரிட்டு அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறைகளுக்கெல்லாம் இலக்கியங்கள் மூலமாக வடிவங்கொடுத்தனர். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறைதான் ஆதித்தமிழர்தம் வாழ்வியல் முறை. இதன் காலமாற்றங்களின் பரிணாமம்தான் திராவிடம் - திராவிடர்கள். திராவிடர்கள் இந்திய நிலப்பரப்பு முழுமையும் பரந்து பட்டு வாழ்ந்தார்கள் என்பதற்கான எச்சங்கள்தான் மொகஞ்சதாரோ - ஹரப்பா - கீழடி அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த தரவுகளும், தொல்லியல் சான்றுப் பொருட்களுமாகும்.

இத்தகைய தொன்மையான நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்த திராவிடச் சமூகத்தில் இடையிலே புகுந்துவிட்ட ஆரிய இனத்தவர்களால் உருவாக்கப்பட்ட ரிக், யஜூர், சாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களும், மனுதர்ம சாஸ்திரங்களும் மனுஸ்மிருதிகளும் “சனாதனக்கோட்பாட்டை” புகுத்தி ஒன்றுபட்டு வாழ்ந்த சமூகத்தை, பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வர்ணப் பிரிவுகளாக்கி பிராமணன் தலையிலும், சத்திரியன் புஜத்திலும், வைசியன் தொடையிலும், சூத்திரன் பாதத்திலும் பிறந்தவர்கள் என்று பிரித்தார்கள். இந்தப் பிரிவினைக்கு அப்பாற்பட்டவர்கள் “பஞ்சமர்கள்” என்று கருதப்பட்டார்கள்.

இந்த நால்வகை வர்ணாசிரமப் பிரிவில் எல்லா வகையிலும் உயர்ந்தவனாக பிராமணன் சருதப்பட்டான். சூத்திரன் பிராமணனுக்கு பணிவிடைகள் செய்திடும் நிரந்தர அடிமையாக்கப்பட்டான். அதுமட்டுமல்ல, கல்வி சூத்திரனுக்கு மறுக்கப்பட்டது. சூத்திரனது நிலை இதுவெனில், பஞ்சமர்களின் பரிதாபமான நிலைகளை விவரிக்க வியலாது! இந்தக் கொடுமைகள் பலநூறு ஆண்டுகாலமாக தொடர்ந்தது. ஆரியர்கள் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அடிப்படைக் கோட்பாடுதான் “சனாதனக் கோட்பாடாகும்”. இதன் விளக்கம் என்பது குல தர்மக் கோட்பாடாகும். நோக்கம் என்பது வர்ணதர்மத்தை நிரந்தரமாக கட்டிக்காப்பது, விளைவு என்பது சூத்திரர்களுக்கும், பஞ்சமர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டு, நிரந்தர அடிமைகளாக பிராமணர்களுக்கு பரம்பரையாக பணியாற்றுவது. பெண்களை உரிமைகள் ஏதுமற்ற போகப் பொருளாக்குவது. கடவுளின் தூதுவன் பிராமணன்தான் என சத்திரியனையும், வைசியனையும், சூத்திரனையும், பஞ்சமர்களையும் நம்ப வைப்பது.

இந்த ஆண்டான் அடிமை முறைக்கும், பெண்ணடிமை முறைக்கும் ஆரியர்கள் இட்டபெயர் “சனாதன தர்மம்”. இதற்கென்ன விளக்கம் என்று வினவினால், “ஆதியும் - அந்தமும் இல்லாதது” என்கிறார்கள். இப்படி “மிதி”கொம்பும் இல்லாமல் “பிடி”கொம்பும் இல்லாமல் அனாமதேயக் கோட்பாடு எங்களுக்குத் தேவையில்லை, அதிலும் குறிப்பாக ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கி முச்சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்து, இயற்கையோடு ஒன்றிவாழ்ந்து, முழுமையான பெண்ணுரிமைகளை வழங்கி, வாழ்வாங்கு வாழ்ந்து உலக சமுதாயத்திற்கு வழிகாட்டும் “திருக்குறள்” என்ற வாழ்வியல் இலக்கியம் படைத்த தமிழ் இனத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கிய ‘சனாதனக் கோட்பாடு’ எனும் வர்ணாசிரமக் கோட்பாட்டை அழிப்பதுதான் எதிர்வரும் காலத்தில் புதிய விடியலை உருவாக்கும்.

எனவே, சனாதனத்தை எதிர்ப்பது என்பதைவிட அழிப்பது அல்லது ஒழிப்பதுதான் சரியான வழிமுறையாக இருக்கமுடியும். இன்னும் தீர்க்கமாகவும், தெளிவாக வும் தெரிவிக்கவேண்டுமாயின் சனாதனக் கோட்பாட்டை அப்புறப்படுத்துவது (Wipeout) கூட எதிர்வரும் காலத்தில் சமூக ஒற்றுமையைச் சீர்குலைக்கும். எனவே, அந்தக் கோட்பாட்டை வேரோடு அப்புறப்படுத்த வேண்டும் (Root out) என்பதே தீர்க்கமான நடவடிக்கையாக இருக்கமுடியும். இந்த நடவடிக்கையை முற்போக்குச் சிந்தனையுள்ள எந்த பிராமணரும், பிராமணப் பெண்களும் மறுக்கமாட்டார்கள் என உறுதியாக நம்பலாம். இந்தத் தெளிவானதும், தீர்க்கமானதுமான கருத்தைத்தான் தமிழ்நாடு விளையாட்டுத்துறை அமைச்சர், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். இந்தக்கருத்து தொடர்ந்து திராவிட இயக்கம் நாட்டுமக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய கோட்பாடுதான். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் என்று திராவிட இயக்கங்கள் தொடர்ந்து மக்கள் மத்தியில் வலியுறுத்திக் கொண்டிருக்கும் சனாதன ஒழிப்பு நிலைப்பாட்டை மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.

அமைச்சர் உதயநிதியின் இந்தக் கருத்தும், நிலைப்பாடும் இந்துக்கள் எனக்கருதப்படுபவர்களுக்கு எதிரானது அல்ல, மேலும் இந்துக்களை ஒழித்துவிடவேண்டும் என்றும் அவர் தெரிவிக்கவில்லை. திராவிட இயக்கச் சிந்தனைகளுக்கும், சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் ஓர் நச்சுச்சிந்தனையின் வெளிப்பாடான சனாதனக் கோட்பாட்டை ஒழிப்பதுதான் உரிய நடவடிக்கையாக இருக்கமுடியும். அதுமட்டுமல்ல, சனாதனக் கோட்பாட்டால் மிகக்குறைந்த சதவிகித எண்ணிக்கையில் உள்ளவர்கள் கல்வி - செல்வம், வேலைவாய்ப்பு என அனைத்து பயன்களையும் பெற்று ஏகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். மக்கள் தொகையில் 90 சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் கல்விகற்க உரிமையின்றி, அடிமைகளாக பிராமணர்களுக்கு குற்றேவல் செய்பவர்களாக வாழ்ந்து வறுமையிலேயே மடிந்திருக்கிறார்கள். இதுதான் பலநூற்றாண்டு காலமாக பிராமணர்கள் தவிர்த்து மற்றைய சனாதனப் பிரிவினர் பட்ட எண்ணிலடங்காத் துன்பங்களும், துயரங்களும் ஆகும்.

இந்தக் கொடுமைகளுக்கு அடித்தளமாகவும், விதையாகவும் கருதப்படுகின்ற சனாதன முறையை சனாதன தர்மம் என்றோ, அல்லது வாழ்வியல்முறை என்றோ எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இயற்கைச் சீற்றங்களாவது வந்து அழிவுகளை உண்டாக்கிவிட்டு மறைந்துவிடும், ஆனால் இந்த வேத அடிப்படையிலான சனாதன தர்மம் உண்டாக்கியிருக்கின்ற பலநூறு ஆண்டுகாலமாக மனிதகுலத்தில் உருவாக்கியிருக்கின்ற பேரழிவுகள் எண்ணிலடங்காதவைகளாகும். அமைச்சர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்துகள் திராவிட இனத்தைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்ல; மனித குல சமத்துவத்தையும், சமூகநீதியையும், பொருளியல்சமத்துவத்தையும், பெண்ணுரிமையை உறுதிப்படுத்துவதற்காகவும் தான் என்பதை, நாட்டில் உள்ள அனைத்து மக்களும் ஏன்? எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும், குறிப்பாக இந்து மதத்தைச் சார்ந்தவர்களும், அமைச்சர் உதயநிதியின் சனாதன ஒழிப்பு நிலைப்பாட்டின் நியாயங்களையும், கடந்தகாலத்தில் சனாதன தர்மத்தால் விலங்கினங்களைவிட பெரும்பான்மையான மக்கள் அனுபவித்த துன்ப, துயரங்களையும் நடுநிலையோடு எண்ணிப்பார்த்து தெளிவுபெறவேண்டும், திருத்திக் கொள்ளவேண்டும் என்பதே அமைச்சர் உதயநிதியின் நோக்கமும், எதிர்பார்ப்புமாகும்.

இந்தக் கருத்தை அமைச்சர் உதயநிதி கூறியவுடன் அதனைத் திருத்தி இந்துக்களுக்கு எதிராகக் கருத்தை வெளிப்படுத்தியதைப்போல ஓர் மாயத்தோற்றத்தை உருவாக்குவதும், வாரணவசியில் ஓர் “சாமியார்” கையில் பட்டாக்கத்தியுடனும், அமைச்சர் உதயநிதியின் படத்துடன் பேட்டி தருகிறார். அந்தச் சாமியார் உதயநிதியின் தலைக்கு 10 கோடி விலை பேசுகிறார். இப்படி பகிரங்கமாகப் பேட்டி கொடுத்த அந்தச் சாமியார் மீது கிரிமினல் நடவடிக்கையல்லவா சட்டப்படி மேற்கொண்டிருக்கவேண்டும்? அந்த மாநில அரசாங்கம் அந்தக் கடமையை நிறைவேற்றியிருக்கிறதா?

அதுமட்டுமல்ல, ஒன்றியத்தின் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு பதில் கூறவேண்டும் என்று ஆணையிட்டுள்ளாரே வாரணாசி சந்நியாசி ஆயுதத்தோடும், அமைச்சர் உதயநிதியின் படத்தோடும், வலம்வந்து உதயநிதியின் தலைக்குப் பத்துக்கோடி விலை பேசுகிறாரே, இதற்கென்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதமரின் நடவடிக்கை அமைச்சரின் நடவடிக்கை அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு எச்சரிக்கை விடுப்பதைப்போல் அல்லவா இருக்கிறது.

அமைச்சர் உதயநிதி ஒருதலைப் பட்சமான சனாதனக் கோட்பாட்டைத்தான் ஒழிக்கச் சொன்னார். இந்துக்களையோ மற்றவர்களையோ அழிக்கச் சொல்லவில்லை. இதை பிரதமர் உரியமுறையில் புரிந்து கொள்ளாமல், அதிகார “நெற்றிக்கண்ணை” அமைச்சர் உதயநிதியை நோக்கித் திருப்புகிறார். தமிழ்மண், அதிகாரத்திற்கு அஞ்சாத நக்கீரனை உருவாக்கிய மண் அல்லவா. ஆம், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று அன்று ஆண்டவனுக்கு எதிராக அஞ்சாமல் நக்கீரன் உண்மையை உறுதிபட எடுத்துச்சொன்னார். ஆம், இந்தத் தமிழ் மண்ணின் நக்கீரன் வழித்தோன்றலாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் டெல்லியிலிருந்து அதிகாரக் கோட்டை நெற்றிக்கண்ணை காட்டிய போதும் சனாதனதர்மம் மனித குலத்திற்கு எதிரான குற்றம் - குற்றமேதான் என தொடர்ந்து வலியுறுத்திவரும் அமைச்சர், தம்பி உதயநிதி ஸ்டாலினை திராவிட இயக்கத்தின் நக்கீரனாகவே மக்கள் ஆச்சரியத்துடனும், ஆர்வத்துடனும் பார்க்கிறார்கள்.